பல்லடம்–கொச்சின் சாலையில் கரடிவாவிக்கருகில் பாலம்

* 632 வின.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம்–கொச்சின் ரோடில், கரடிவாவிக்கு மேல்புறம் உள்ள ரோட்டில் ஒரு பாலம் கட்ட வேண்டி சம்பந்தப்பட்ட சட்டப் பேரவை உறுப்பினரிடமிருந்து விண்ணப்பம் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஆம்.

(இ) நிதிப் பற்ருக்குறையினுல் அதன்மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

சீர்காழி வட்டத்துக்கு நெடுஞ்சாலைத்துறைப் பிரிவு

*633 வின.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தாலுகாவிற்குத் தனியே நெடுஞ்சாலைத்துறையைப் பிரிவினை ஏற்படுத்தி ஒரு சப்-டிவிஷன் ஆபீசர் நியமிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சீர்காழியில் முறையான நெடுஞ்சாலைத்துறை உட்கோட்டம் ஒன்றை அமைத்து உட்கோட்ட அதிகாரி ஒருவரை நியமிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

எனினும், காவிரி ஆயக்கட்டுப் பகுதிகளில் ஒருங்கிணைந்த சாலைகள் விற்பனை வசதிகள் செய்து கொடுப்பதற்கான இந்திய அரசினுல் ஒப்பளிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட விருக்கின்ற பணிகளை நிறைவேற்றுவதற்காக அரசு ஆணை (பலவகை) எண். 2247, பொதுப்பணித்துறை, நாள் 28—10—1971-ல் இரண்டு கோட்டங்களும் ஆறு உட்கோட்டங்களும் ஏற்படுத்த ஒப்பளிக்கப்